**தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்றிட்டம் - 2016**

-----------------------------------------------------------------------------

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந் திகதிய 2217 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 6 ஆம் பட்டோலையின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

-----------------------------------------------------------------------------

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் வீதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,655 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 208 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,275 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேற்குறிப்பிட்டதற்கு கடனுக்கு மேலதிகமாக, 2010 ஒக்தோபர் 04 இல் பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் (OPEC) நிதியத்துடன் இலங்கை அரசாங்கத்தால் 1355 பி இலக்க மற்றுமொரு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் ரூபா 880 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியன் ஒதுக்குவதற்கு இணங்கப்பட்டது. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் 2006 ஏப்ரல் 07 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் நிதியளிப்பு ஏற்பாடுகள் 2015 யூன் 30 இல் மூடப்பட்டிருந்தது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2016 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி

செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நெடுஞ்சாலைகள் செயலக கட்டிடத்தின் உற்பகுதி வடிவமைப்பிற்கான ஆலோசனை கட்டணங்கள் ரூபா 19.112 மில்லியன் தொகை தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் - மேலதிக நிதியிடல் என அழைக்கப்படும் ஏனைய செயற்திட்டத்தின் கீழ் தவறுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் போது வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 ஆம் ஆண்டின் போது | | 2016 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடீபீ | 150.00 | 15,275 | - | - | - | 150.00 | 17,272 |
| ஓஎவ்ஐடி | 8.00 | 880 | - | - | - | 8.00 | 928 |
| இலங்கை அரசாங்கம் | 58.00 | 6,380 | 284.45 | 0.59 | 86.75 | 62.07 | 9,177 |
| **மொத்தம்** | **216.00** | **22,535** | **284.45** | **0.59** | **86.75** | **220.07** | **27,377** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 353 கிலோமீற்றர்கள் நீளமான 06 தேசிய வீதிகளின் முன்னேற்ற வேலைகள் பூர்த்திச் செய்யப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் மாத்திரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், நெடுஞ்சாலையின் செயலகத்திற்கான கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டிடத்தின் உள்ளக வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 03 மட்டங்களுடனான நெடுஞ்சாலைகள் செயலகத்திற்கான கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட வேலைகளின் பரப்பெல்லை, பின்னர் 10 மட்டங்களைக் கொண்ட கட்டிடமொன்றாக மாற்றப்பட்டிருந்தது. அதன் விளைவாக, 2010 ஆம் ஆண்டில் ரூபா 599.30 மில்லியனாக மதிப்பிடப்பட்ட நிர்மாண கிரயம் 2016 திசெம்பர் 31 இல் ரூபா 2,057.25 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டினை தவிர, அவ்வாறான வேலைகளின் மாற்றங்களுக்கான கிரயங்களினை சந்திப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2015 திசெம்பர் 10 இல் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. நிர்மாண ஒப்பந்தத்தின் குறை பொறுப்புடைய காலப்பகுதி 2016 செப்தம்பர் 10 இல் முடிவடைந்திருந்த போதிலும், கட்டிடத்தின் குறைபாடுகளினை கண்டறிவதற்கு ரூபா 9.55 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 2015 யூலை 07 இல் தனியார் கம்பனியொன்றிற்கு தனியான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 மே 30 வரை ஆலோசகர் பூர்த்தியாக்கல் அறிக்கையினை விநியோகித்திருக்காததுடன் 2016 திசெம்பர் 31 இல் பிடிகாசினை செயற்திட்டம் விடுவித்திருந்தது.

(ஆ) மேலும், மின்பிறப்பாக்கிகள், நிலக்கீழ் எரிபொருள் தாங்கி, தரவு வலையமைப்பு, பரிமாற்று முறைமைகள், மின்பாரம் தூக்கிகள் மற்றும் வளிப்பதனாக்கி முறைமை போன்ற உண்மையான அளவுச்சிட்டையில் உள்ளடக்கப்படாத பல உருப்படிகள் மாறுபாடுடைய கட்டளைகளில் ரூபா 495.39 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மேந்தலைகள், பொருத்தும் கூலிகள் மற்றும் இலாப எல்லைகளின் மீது 35 சதவீதம் வரை மேலதிக கட்டணமொன்றினை

கோருவதற்கு ஒப்பந்ததாரர்க்கு அனுமதியழிக்கப்பட்டது. மேலும், ரூபா 218.93 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்ட கட்டிடத்தின் வளிப்பதனாக்கி முறைமை 2017 மே 30 வரையேனும் முறையாக செயற்படவில்லை. அதன் விளைவாக, மேலதிக 30 வளிப் பதனாக்கிகளினை நிறுவுவதற்கு ரூபா 5.25 மில்லியன் மேலதிக கிரயமொன்று நேரிடவுள்ளது.

(இ) பகிர்வு செய்தல் மற்றும் உட்கூறை வேலைகளின் விநியோகம் மற்றும் பொருத்துகை, தளபாடங்களின் விநியோகம் மற்றும் பொருத்துகை மற்றும் மர வேலைகள் மற்றும் உள்ளக முடிவுறுத்தல் மற்றும் தரை வேலைகளுக்கான ஒப்பந்தம் ரூபா 241.60 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 04 ஒப்பந்தரார்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 03 ஒப்பந்தங்களின் கீழ் இணங்கப்பட்ட கிரயங்கள் பின்னர் ரூபா 85.50 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் கால வீச்சின் நீடிப்புக்கள் 147 தொடக்கம் 154 நாட்கள் வரை வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 3.86 மில்லியன் பெறுமதியான வேலைகளின் 55 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த பின்னர், ஒப்பந்தாரர்களின் தோல்விகள் காரணமாக, இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகளின் விநியோகம் மற்றும் நிறுவுகைக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டது.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

கட்டிட கேட்போர் கூடத்திற்கு ரூபா 6.47 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட பொது கேட்போர் முறைமை 02 வருடங்களுக்கு மேலாக விளைவற்று தொடர்ந்தும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.